THE SUDAR OLI
# சுடர் ஒளி
Registered as Newspaper
07.06.2020 ஞாயிற்றுக்கிழமை

## உயர்தர பரீட்சைக்கான திகதி முடிவில்லை

கொழும்பு, ஜூன் 7
இந்த ஆண்டு நடைபெற வுள்ள உயர்தரப் பரீட்சைக் கான திகதி இதுவரை தீர்மா னிக்கப்படவில்லை என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. சுகாதார அமைச் சின் அறிவுத்தல்க

2



## நீரில் மூழ்கி சிறுவன் சாவு

கொழும்பு, ஜூன் 7
மொனராகல படல்கும் புர பரேய்யன் நீர்தேக் கத்தில் நீராடச் சென்ற 7 வயது சிறுவன் ஒரு வன் நீரில் மூழ்கி உயிரி ழந்துள்ளார். நேற்று மாலை தனது குடும்ப உறுப்பி னர் ஒருவருடன்

2



## தெல்லிப்பழையில் கூரிய ஆயுதங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 7
யாழ்ப்பாணம் தெல்லிப் பழை பகுதியில் இராணு வத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் கூரிய ஆயுதங்கள் சில இராணுவத்தின ரால் மீட்கப்பட்

2

# இரு கட்டங்களாக தேர்தல்!

### தேர்தல் ஆணைக்குழு தீவிர ஆலோசனை



கொழும்பு, ஜூன் 7
பொதுத்தேர்தலை இரு கட்டங்களாக நடத்து வது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு தீவிரமாகப் பரிசீ லித்து வருகின்றது. பொதுத்தேர் தலை எதிர்வரும் ஓகஸ்ட் மாத முற் பகுதியில் நடத்துவதற்கு தேர்தல் கள் ஆணைக்குழு உத்தேசித்துள் ளபோதும், சுகாதார அமைச்சு கூறும் வழிமுறைகளைப் பின்பற்று வதாயின் அதற்குப் போதிய அளவு கால அவகாசம் இல்லை என்று ஆணைக்குழு கருதுவ தாக அறிய முடிகின்றது.

2

## பொதுப் போக்குவரத்து நாளையே இறுதி முடிவு

கொழும்பு, ஜூன் 7
பொதுப் போக்குவரத்து சேவைகள் நாளை திங்கட்கிழமை முதல் வழமைபோன்று இயங்கும் என்று முன்னர் அறிவிக்கப் பட்டிருந்தபோதும், ஜனாதிபதி தலை

2

## பம்பைமடு முகாமில் மூவருக்கு கொரோனா

### அவர்கள் மூவரும் கடற்படையினர்

வவுனியா,ஜூன் 7
வவுனியா பம்பைமடு இராணுவ முகா மில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா வைரஸ் தனிமைப்படுத்தல் முகாம்

2



## தேர்தல் ஒத்திகை

கொழும்பு, ஜூன் 7
சுகாதார நடைமுறைக ளைப் பின்பற்றி எவ்வாறு பொதுத்தேர்தலை நடாத்துவது என்பது தொடர்பில் அனுப வத்தைப் பெற்றுக்

2

## கொரோனா வைரஸால் சிறுவர்களும் பாதிப்பு!

கொழும்பு, ஜூன் 7
கொரோனா வைரஸ் காரணமாக உலகளாவிய ரீதியாக பல சிறார்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று ஐக்கிய நாடுகள் சபை யின் சிறுவர் நிதியம் தெரிவித்துள்ளது. அந்த அறிக்கை

2

## புதினம் தெரியுமோ?

கொரோனாக் காலத்தில் எவரும் வேலைக்குப் போகாததால் எல்லா வீடுகளி லும் பெரும் பொருளாதார நெருக்கடி. இந்த இடர் நிலைமையைக் குறைக்க அரசாங்கம் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவை இரு மாதங்க ளுக்கு வழங்கியிருந்து. ஆனைப் பசிக்கு சோளப்பொரி போல இந்த 5 ஆயிரம் ரூபா இருந்தா லும், அப்போதைய நெருக்கடிக்கு இது பலருக்கும்

2A

## கொரோனாவிலிருந்து 50 பேர் மீண்டனர்

கொழும்பு, ஜூன் 7
இலங்கையில் 50 கொரோனா தொற் றாளர்கள் குணமடைந்துள்ளனர் என்று சுகாதார அமைச்சு இன்று தெரிவித்துள் ளது. குணமடைந்தவர்களில் 35 பேர் கடற்படையினர் என்றும் தெரிவிக்கப் பட்டது. இலங்கையில் இதுவரை 941 கொரோனாத் தொற்றாளர் கள் குணமடைந்துள்ளனர்.

2



## உறவுகள் வவுனியாவில் நேற்றும் ஆர்ப்பாட்டம்

வவுனியா, ஜூன் 7
காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி வேண்டி, நேற்றும் வவுனியாவில் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. கதறி அழுது, கண்ணீர்விட்டு உறவுகள் போராட்டத்தில் ஈடுபட்டனர். போர்க்காலத்திலும், அதனை

2

## கொரோனா சமூகப் பரவல் அபாயம் தற்போதுமுண்டு



### எச்சரிக்கின்றார் அனில் ஜாசிங்க

கொழும்பு, ஜூன் 7
கொரோனா வைரஸ் மீண்டும் சமூகம் முழுவதும் பரவும் அபாயம் காணப்படுகின்றது என்று எச்சரிக்கை விடுத்துள்ளார் சுகாதார சேவை கள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய

2

## மசகு எண்ணெய் விலை உயர்வு

கொழும்பு, ஜூன் 7
உலக சந்தையில் எரிபொருளின் விலை அதிகரித்துள்ளதாக சர்வதேச ஊடகங் கள் தகவல் வெளியிட்டுள்ளன. கொரோனா வைரஸ் உலகம் முழுவதும் பரவியிருந்தமையால் பல நாடு கள் முடக்கப்பட்டிருந்தன. பொதுப் போக்குவரத்துக்கள் தடைப்பட்

2

## உயர்தர....

ளைக் கவனத்தில் கொண்டு உயர்த ரப் பரீட்சைக்கான திகதி தீர்மா னிக்கப்படும் என்று ஆணையாளர் நாயகம் சனத் பூஜித இன்று தெரிவித்துள்ளார்.
மாணவர்களுக்குப் பாதிப்பு ஏற்ப டாத வகையில் உயர்தரப் பரீட் சையை நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ப)

## நீரில் மூழ்கி...

நீராடச் சென்ற போது விப ரீதம் நடந்துள்ளது. படல் கும்புர பொலிஸார் மேல திக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.(க)

## தெல்லிப்பழையில்...

டுள்ளன. இன்று காலை இராணுவத்தினர் மேற் கொண்ட சுற்றிவளைப்பின் போதே இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டன என்று பாது காப்புத் தரப்பினர் தெரிவித் துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசார ணைகள் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன. (ம-20)

## கொரானா சமூகப் பரவல்...

நிபுணர் அனில் ஜாசிங்க.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ள நிலையில், பொதுப்போக்குவரத்துக் காக அறிமுகப்படுத்தப்பட்ட சுகாதார விதிமுறைகளைக் கண்டிப் பாக நடைமுறைப்படுத்த வேண் டும். இதுபோன்ற சுகாதார விதிமு றைகள் நடைமுறைப்படுத்தப்படா விட்டால், கொரோனா வைரஸ் மீண்டும் சமூகம் முழுவதும் பரவும் அபாயம் காணப்படுகின்றது. அதன் பாதிப்பு உலக நாடுகள் மாதிரி மோசமாக இருக்கக்கூடும். பொதுப் போக்குவரத்து பஸ்களின் சுகாதார விதிகள் முறையாகச் செயற்படுத்தப் படவில்லை என்று பல்வேறு தரப்பி னர்கள் முறைப்பாடுகளைச் செய்துள் ளனர். பஸ்களின் சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் சமூக இடைவெளி குறித்த சட்டத்தை மீறுகின்றனர் என்று சுகாதார அதிகாரிகளுக்குத் தகவல் கிடைத்துள்ளது.
இதுபோன்ற சட்டங்களை மீறும் சாரதிகள் மற்றும் நடத்துநர்களைக் கைதுசெய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது-என்றார். (எ-22)

# இரு கட்டங்களாக...

வாக்காளர் அட்டை விநியோகம், வாக்களிப்போருக்கு விசேட மையை விரலில் சுகாதாரப் பாதுகாப்புகளுடன் இடுவது, தேர்தல் உத்தியோகத்தர்களுக் கான விசேட ஆடைகள், வாக்கெடுப்பு வாக்கெண்ணும் நிலையங்களின் சுகா தார பாதுகாப்பு உட்பட தேர்தல் ஏற்பாடு களைச் செய்ய போதியளவு கால அவகா சம் உள்ளதா என்பது பற்றி தேர்தல்கள் ஆணைக்குழு ஆராய்ந்து வருகின்றது.
நாளை கொழும்பில் கூடவுள்ள தேர்தல் கள் ஆணைக்குழு உறுப்பினர்கள் இந்த விடயங்கள தொடர்பில் தீவிரமாக ஆராயவுள்ளனர். தனி நபர் இடைவெளி யுடன் தேர்தல் வாக்களிப்பு இடம்பெற வேண்டுமென்பதால் இரு கட்டங்களாகத் தேர்தலை நடத்துவது தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளது என்று தெரியவரு கின்றது.
அடுத்தடுத்த நாள்களில் தேர்தலை நடத்துவதற்குச் சட்டத்தில் இடமில்லை. வாக்களிப்பு நடந்தால் 14 நாள்களின் பின்னரே அடுத்த கட்ட வாக்களிப்பு நடக்க வேண்டும். வாக்கெண்ணும் விடயத்தில் சிக்கல் இருக்கக்கூடாது.
இதுதொடர்பாக நாளை ஆணைக்குழு விரிவாக ஆராயும் என்று தேர்தல்கள் திணைக்கள வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. இந்த நிலைமைகளால் பொதுத்தேர்தல் ஓகஸ்ட் மாதத்தில் இருந்து பிற்போடப்படுமா என்ற சந்தேக மும் அரசியல் வட்டாரங்களில் எழுந்துள் ளது. (எ)

## கொரோனா வைரஸால்...

யில் மேலும் குறிப்பிட்டுள்ள தாவது:
கொரோனா வைரஸ் காரண மாக உலகளாவிய ரீதியாக பல சிறார்கள் பாதிக்கப்பட்டுள்ள னர் ஆசிய நாடுகளில் வீதி ஓரங்களிலும் சேரிகளிலும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் சிறார்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். அடிப் படை வசதியற்ற நிலையில் உள்ள இவர்களிற்கு இயன்ற அளவி லான உதவியினை சிறுவர் நிதி யம் வழங்கி வருகின்றது. இந்தக் காலகட்டத்தில் சிறார்களின் தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுவது சமூகத்தின் கட்டாயம் - என்றுள்ளது. (ம)

## பொதுப் போக்குவரத்து...

மையில் நாளை இடம்பெறும் கூட்டத்தின் பின்னரே இறுதி முடிவு எடுக்கப்படும் என்று போக்கு வரத்து அமைச்சு அறிவித்துள்ளது. சுகாதார முன்னேற்பாடுகளுடன் அனைத்து மாவட்டங்க ளுக்கும் இடையே போக்குவரத்துச் சேவையை நடத்துவது எப்படி என்பது, எப்போது முதல் அதை ஆரம்பிப்பது என்பன தொடர்பாக இன் றைய கூட்டத்தின் (நாளை) பின்னரே அறிவிக்கப் படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## கொரோனாவிலிருந்து....

அவர்களில் 488 பேர் கடற்படையினர் என்று தெரி விக்கப்படுகின்றது.
நேற்று புதிய தொற்றாளர்களாக 13 பேர் அடையா ளம் காணப்பட்டிருந்தனர். அவர்களில் 9 பேர் கடற்படையினர் எனவும், 3 பேர் ரஷ்யாவிலிருந்து திரும்பி வந்து தனிமைப்படுத்தப்பட்டிருந்தவர்கள் எனவும், ஒருவர் குவைத்திலிருந்து திரும்பி வந்து தனிமைப்படுத்தப்பட்டிருந்தவர் எனவும் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.
அதேவேளை, இலங்கையில் ஆயிரத்து 814 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர். 862 பேர் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெறுகின்றனர். 70 பேர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியிருக்கலாம் என்ற சந்தேகத்தில் மருத்துவமனைகளில் கண்காணிக் கப்படுகின்றனர். இதுவரை இலங்கையில் 11 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர். (எ)

## மசகு எண்ணெய்...

டன. மக்கள் வீடுகளுக்குள் முடங்க வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது. தொழிற்சாலைகள் பல மூடப்பட்டிருந்தன.
இந்த நிலையில் எரிபொருள் விலை சடுதியாக குறைந்திருந்தது.தற்போது பல நாடுகள் தமது கட்டுப் பாடுகளைத் தளர்த்தி பொதுமக்களின் அன்றாடச் செயற்பாடுகளுக்கும் வர்த்தக நடவடிக்கைகளுக்கும் இடமளித்துள்ளன. இதனையடுத்து, மசகு எண் ணெய் விலை தற்போது 38 டொலரில் இருந்து 42 டொலர் வரை உயர்ந்துள்ளதாக சர்வதேச ஊடகங் கள் தகவல் வெளியிட்டுள்ளன. (க)

## பம்பைமடு முகாமில்....

மற்றும் பெரியகாடு தனிமைப்படுத்தல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருந்த மூவருக்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது.
வெலிசறையில் அமைந்துள்ள கடற்படை முகாமில் பணியாற்றிய கடற்படை உத்தியோகத்தர்களுக்கே கொரோனோ நோய்த் தொற்று இருப்பது கண்டுபி டிக்கப்பட்டது. இந்நிலையில் குறித்த முகாமில் கடமையாற்றிய கடற்படை வீரர்கள் மற்றும் அவர்க ளது உறவினர்கள் தனிமைப்படுத்தப்படுத்தும் நடவ டிக்கைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தனர்.
அந்த வகையில் வவுனியா பம்பைமடு, பெரியகாடுப் பகுதிகளில் அமைக்கப்பட்டிருந்த தனிமைப்படுத்தல் முகாம்களுக்கு கடற்படை உத்தியோகத்தர்கள் மற்றும் அவர்களது உறவினர்கள் கொண்டுவரப்பட்டு தனி மைப்படுத்தும் நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்டிருந் தனர். அங்கு தங்கவைக்கப்பட்டிருப்பவர்களுக்கான பி.சி.ஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வரு கின்றது. குறித்த பரிசோதனையில் மாத்தறை மற்றும் றாகமை பகுதிகளைச் சேர்ந்த மூன்று கடற்படைச் சிப்பாய்களுக்கே கொரோனா தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது. (ப-110)

## தேர்தல்...

கொள்வதற்கான பரீட்சார்த்த தேர்தல் அம்பலாங்காடை, விலேகொட தம்மயுக்திராமய விகாரையில் இன்று நடைபெற் றது.
முற்பகல் 10 மணிக்கு ஆரம்ப மான வாக்களிப்பு நண்பகல் 12 மணிக்கு நிறைவுபெற்றது.
வாக்களிப்பு நிலையத்துக்கு முன்னால் கைகளைக் கழுவுவ தற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டி ருந்தன. முகக் கவசம் அணிவது கட்டாயம், தனிநபர் இடைவெ ளியைக் குறிக்கும் வகையில் அடையாளங்கள் காட்சிப்படுத் தப்பட்டிருந்தன. ஒருவருக்கு வாக்களிப்பதற்கு எவ்வளவு நேரம் தேவைப்படுகின்றது, மணித்தியாலத்துக்கு எத்தனை பேர் வாக்களிக்கலாம் என்பன உட்பட மேலும் சில விட யங்கள் அவதானிக்கப்பட்டன.
பரீட்சார்த்த தேர்தல் முடிவ டைந்ததும் அது தொடர்பில் கருத்து வெளியிட்ட தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்த தாவது,
தற்போதைய சூழ்நிலையில் எவ்வாறு வாக்களிப்பை நடத்த லாம் என்பதை அறியவே இந்த முயற்சி. இன்று நாம் 10 மணிக்கு வாக்களிப்பை ஆரம் பித்து 12 மணிக்கு நிறைவு செய்தோம். இக்காலப்பகுதியில் 239 வாக்குகள் அளிக்கப்பட் டிருந்தன.
இதன்படி ஒரு மணிநேரத்தில் தனிவரிசையில் 100 வாக்குகள் விழுகின்றதெனில் மணித்தியா லயத்துக்கு 1000 வாக்குகள் விழும் என்பதை ஊகிக்கமுடிந் தது. வாக்காளர்களின் வருகை ஒரே விதத்தில் இடம்பெற வேண்டும்.
அதேபோன்று அதிகளவு மக்கள் வந்தால் எப்படி வாக்களிப்பை நடாத்துவது, வாக்களிப்பு நிலையம் என்றால் உள்நுழைவ தற்கு ஒரு கதவும், வெளியேறுவ தற்கு மற்றுமொரு கதவும் இருக்கவேண்டும். இவ்வாறு வசதி இல்லாத சிறிய வாக்க ளிப்பு நிலையங்களில் எவ்வாறு தேர்தலை நடாத்துவது, இவை குறித்து இவ்வாரத்துக்குள் முடிவெடுக்கப்படும். எனவே, ஏனைய சில பகுதிகளிலும் பரீட்சார்த்த தேர்தல் நடாத்தப் படும். வாக்களிக்காமல் இருப்ப தற்கு அல்ல, மக்கள் வாக்களிப் பதற்கு ஏதுவான சூழ்நிலையை உருவாக்குவது எமது நோக்கம்.
இன்று பெறப்பட்ட அனுபவத் தின் பிரகாரம் தேர்தலை நடத்துவதில் பெரும் பிரச்சி னைகள் வராது. சிறிய வாக்க ளிப்பு நிலையங்கள் தொடர்பி லேயே அவதானம் செலுத்தப்ப டவேண்டும்- என்றார். (க-44)

## உறவுகள் வவுனியாவில்...

அண்டிய காலப்பகுதியிலும் கையளிக்கப் பட்டு, கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப் பட்ட உறவுகளை மீட்டுத்தருமாறு கோரி யும், அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்துமாறு வலியுறுத்தியும் காணா மல் ஆக்கப்பட்ட உறவுகள் தொடர் போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர். அந்தப் போராட்டம் வவுனியாவில் ஆயிரத்து 200ஆவது நாளைத் தாண்டியும் முன்னெ டுக்கப்படுகிறது. இவ்வாறான நிலையில் வவுனியா நீதிமன்றத்திற்கு முன்பாக கடத்தப் பட்ட தனது மகனைத் தேடி போராட்டத் தில் ஈடுபட்டு வந்த தந்தையொருவர் அண் மையில் உயிரிழந்தார். கடத்தப்பட்ட அவரின் மகனுக்கு நீதிகோரியே நேற்று உறவுகள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.
வவுனியாவில் நீதிமன்றத்திற்கு முன்பாக கடத்தப்பட்ட மகன் எங்கே , எங்கள் பிள்ளைகள் எமக்கு வேண்டும் , வெளிநாடு தலையிட்டு எமக்குரிய தீர்வினைப் பெற்றுத் தர வேண்டும் , உங்கள் கைகளில் ஒப்படைக் கப்பட்ட பிள்ளைகள் எங்கே, சர்வதேச விசாரணை வேண்டும் போன்ற பல்வேறு கோசங்களை எழுப்பியவாறு கதறி அழுது உறவுகள் தமது கவலையை வெளிப்படுத்தியி ருந்தனர். உயிரிழந்த சின்னச்சாமி நல்லதம்பி (வயது,71) என்ற தந்தையின் உருவப்படத் துக்கு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மலர் தூவி கண்ணீர் மல்கி அஞ்சலி செலுத்தினர். (ப-18,110)

# அனைவருக்கும் பி.சி.ஆர்.

## எவரும் தப்பவே முடியாது என சுகாதார அமைச்சு திட்டவட்டம்

கொழும்பு, ஜூன் 7

வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்கள் தாம் வசிக்கும் நாடுகளில் பி.சி.ஆர். பரிசோதனையை மேற்கொண்டு நாடு திரும்பினாலும், நாட்டை வந்தடைந்ததும் மீண்டும் பி.சி.ஆர். பரிசோதனையை மேற்கொள்ள வேண்டும். இந்த விதிமுறையிலிருந்து எவரும் தப்பவே முடியாது.

இவ்வாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:



இலங்கையில் காணப்படும் தனிமைப்படுத்தல் நிலையங்களின் எண்ணிக்கை, கொரோனா சிகிச்சை வழங்கும் வைத்தியசாலைகள் மற்றும் சமூகத்தில் தொற்று பரவாத வகையில் பராமரிப்பு செயற்பாடுகளை முன்னெடுத்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்களின் அடிப்படையில் வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்கள் அழைத்து வரப்படுகின்றனர்.

இருப்பினும் வெளிநாடுகளில் இருந்து வருகைதரும் இலங்கையர்களில் சிலருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்படுவதால், தேவையான அனைத்து நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமாகும். வெளிநாடுகளில் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனைகளில் எவ்வித பயன்களும் இல்லை.

இதன் காரணமாக நாடு திரும்பும் அனைவருக்கும் விமான நிலையத்தில் பி.சி.ஆர். பரிசோதனையை மேற்கொள்ளுதல் கட்டாயமானது.

விமான நிலையங்களில் காலையில் எடுக்கப்படும் மாதிரிகளுக்கான பி.சி.ஆர். அறிக்கை மாலை வேளைக்குள் வழங்கப்படும்.

பி.சி.ஆர். அறிக்கை கிடைக்கும் வரை அனைத்துப் பயணிகளும் விமான நிலையத்தில் தங்கவைக்கப்பட்டு, தேவையான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்றார். (எ22)

# ஜனாதிபதி செயலணிகளின் உருவாக்கத்தில் சந்தேகம்!

## மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 7

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவால் நிறுவப்பட்டுள்ள இரு புதிய ஜனாதிபதி செயலணிகளின் அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பாகப் பல சந்தேகங்கள் உள்ளன. அரசும், அரசியல்வாதிகளும் நாடாளுமன்ற ஜனநாயகத்தைப் பாதுகாத்து வலுவூட்டும் வகையில் செயற்பட வேண்டும். இவ்வாறு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பாக அந்த நிலையம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவால் இரண்டு ஜனாதிபதி செயலணிகள் நிறுவப்பட்டமை தொடர்பில் எமது அமைப்பு மிகுந்த அவதானம் செலுத்தியிருக்கிறது.

நாடாளுமன்றத்தைக் கலைக்கும் வகையில் ஜனாதிபதி விடுத்த வர்த்தமானியையும், எதிர்வரும் 20 ஆம் திகதி பொதுத்தேர்தலை நடத்துவதற்கு தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு விடுத்த வர்த்தமானியையும் வலுவிழக்கச் செய்யக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் அனைத்தையும் உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்து தீர்ப்பளித்த பின்னர் இது நடைபெற்றிருக்கிறது.

இந்த இரு ஜனாதிபதி செயலணிகளின் நியமனம் தற்போது உருவாகிவரும் பிரச்சினைக்குரிய சர்வாதிகாரம் மற்றும் இராணுவமயமாக்கம் ஆகிய போக்குகளையும், அரசமைப்பு ரீதியான ஜனநாயகம் மற்றும் நல்லிணக்கம் ஆகியவற்றுக்கு ஏற்பட்டிருக்கும் பெரும் தாக்கம் என்பவற்றையும் வெளிக்காட்டி நிற்கிறது.

ஒழுக்கமானதும், சட்டக் கட்டுப்பாடுடைய சமூகமொன்றைக் கட்டியெழுப்புவதை நோக்காகக் கொண்டும் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி செயலணி பாதுகாப்புச் செயலாளரால் தலைமை தாங்கப்படுவதுடன், அந்தச் செயலணியின் உறுப்பினர்களில் பெரும்பான்மையானோர் முன்னாள், இந்நாள் இராணுவ மற்றும் சட்டம், பாதுகாப்புடன் தொடர்புடைய அதிகாரிகளாகவே இருக்கின்றனர்.

இந்தச் செயலணிக்கு 'சமூகவிரோத செயற்பாடுகளை' கண்காணிக்கும், தடுக்கும் பணிகள் வழங்கப்பட்டிருக்கின்ற போதிலும், அதற்குரிய சரியான பொருள்கோடல் வழங்கப்படாத நிலையில் அத்தகைய செயல்களுக்கு எதிரான செயலணி எவ்வாறு நடவடிக்கை எடுக்கும் என்ற கேள்வி எழுந்திருக்கிறது.

இந்த ஜனாதிபதி செயலணியானது சட்டவிரோத போதைப்பொருள் கடத்தலை தடுப்பதை மாத்திரம் பணியாகக் கொண்டிருக்கிறதா அல்லது விரிவானதொரு மட்டத்தில் நின்று செயற்படுமா என்பது தொடர்பான சந்தேகங்களும், இதன் அதிகார எல்லைகள் பற்றிய குழப்பங்களும் இருக்கின்றன.

மற்றைய செயலணி கிழக்கிலங்கையின் தொல்பொருள் சின்னங்களைப் பாதுகாப்பதற்கென உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்தச் செயலணி கிழக்கிலுள்ள பல்லின அடையாளத்தை மறைக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்டிருக்கிறதா என்பது உள்ளடங்கலாக பல்வேறு சந்தேகங்கள் இருக்கின்றன.

இத்தகைய நியமனங்கள் அனைத்தும் நிறைவேற்றதிகாரத்துக்கும் அதிகாரத்துக்கும் இடையில் சமநிலையொன்று பேணப்பட வேண்டிய தேவையின்றி ஆட்சி செய்யக்கூடிய வாய்ப்பு ஜனாதிபதிக்குக் காணப்படும் சந்தர்ப்பத்தில் இடம்பெற்றிருக்கிறது என்பது கவனிக்கத்தக்கதாகும்.

அத்துடன் அதிகரித்துவரும் இராணுவமயமாக்கல் மற்றும் முக்கிய தீர்மானங்களை மேற்கொள்வதில் முன்னாள், இந்நாள் இராணுவ மற்றும் பொலிஸ் அதிகாரிகளின் பங்களிப்பு என்பன குறித்தும் நாம் வெகுவாக விசனமடைந்திருக்கின்றோம். இந்தநிலையில் அரசும், அனைத்து அரசியல்வாதிகளும் நாடாளுமன்ற ஜனநாயகத்தைப் பாதுகாத்து, வலுவூட்டும் வகையில் செயற்படுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (எ)

## புதினம் தெரியுமோ?

பேருதவியாக அமைந்தது. ஆனால் பிச்சை எடுக்குதாம் பெருமாள், அதைத் தட்டிப் பறிக்குதாம் அனுமான் என்ற கதையும் இங்கே நடந்திருக்கிறது. யாழ்ப்பாணம், தென்மராட்சியில் உள்ள சமுர்த்தி வங்கி அதிகாரி ஒருவர் இந்த 5 ஆயிரம் ரூபாக் கொடுப்பனவை வழங்குவதாயின் 500 ரூபாவைக் கட்டி சேமிப்புக் கணக்கொன் றைக் கட்டாயம் திறக்க வேண்டும் என்று பயனாளிகளை நிர்ப்பந்தித்திருக்கிறார்.

மக்களும் வேறுவழியின்றி, மிகுதி 4500 ரூபாவாவது கிடைக்கவேண்டுமே என்ற நிலையில் அவர் சொன்னபடி 500 ரூபாவை வைப்பிலிட்ட பின்னரே மிகுதிப் பணத்தை பெற்றுள்ளனர். இப்படி சுமார் 1500 குடும்பங்களிடம் பணத்தை அறவிட்டுள்ளார் அந்த அதிகாரி. ஆனால் அப்படி 500 ரூபா வைப்பிலிட்டால் மட்டுமே உதவித்தொகை வழங்கப்படுமென்று எந்தவொரு சுற்றுநிருபமோ, மேலதிகாரிகளின் உத்தரவோ இல்லாமல் குறித்த சமுர்த்தி வங்கி முகாமையாளர் தன்னிஷ்டப்படி இப்படி கொரோனாக் காலத்தில் துன்பப்பட்ட மக்களை இன்னும் ஏறி மிதித்திருக்கிறார். ஆயினும் பின்னர் இது உரிய அதிகாரிகளின் கவனத்துக்குப் போகவே, அந்த முகாமையாளருக்கு செம 'டோஸ்' கொடுத்து, மக்களிடம் அறவிட்ட பணத்தை மீளச் செலுத்துமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது. இப்போது அந்த 1500 குடும்பங்களுக்கும் வைப்பிலிட்ட பணத்தை திருப்பிக் கொடுத்து வருகிறாராம் அந்த முகாமையாளர். சொன்னதைக் காட்டிலும் சிறப்பான அடைவுமட்டத்தை எய்தியதாக உயர் அதிகாரிகள் நல்லபெயரை வாங்கி, தன் 'பவரை' உயர்த்துவதற்காக ஏழைகளின் வயிற்றில் அடிப்பவர்களை என்னவென்பது?

# 1,350 போதை மாத்திரைகள் மீட்பு

கொழும்பு,ஜூன் 7

பேருவளை நகரில் இன்று வீதிச் சோதனையில் ஈடுபட்டு வந்த பொலிஸார் இரு மோட்டார் சைக்கிள்களை நிறுத்தி சோதனையிட்ட போது, அவற்றில் மிகவும் சூசகமான முறையில் மறைத்துக் கொண்டு செல்லப்பட்ட சுமார் 1, 350 போதை மாத்திரைகளைக் கைப்பற்றினர்.

சம்பவம் தொடர்பில் மூவர் கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் பயணித்த இரு மோட்டார் சைக்கிள்களும், மூன்று கைத்தொலைபேசிகளும் கைப்பற்றப்பட்டன. சந்தேகநபர்கள் 24, 32, 37 வயதான பேருவளை, வெலிப்பென்னை மற்றும் பிங்ஹேன பகுதியைச் சேர்ந்தவர்களாவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (க)



# கூட்டமைப்பின் வேட்பாளர்களுக்கிடையில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 7

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிடவுள்ள மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர்களுக்கிடையிலான கலந்துரையாடலொன்று நேற்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிப் பணிமனையில் வேட்பாளரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளருமாகிய கி. துரைராசசிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சீ.யோகேஸ்வரன், ஞா.சிறிநேசன், முன்னாள் மாகாணசபை உறுப்பினர் கோ.கருணாகரம், முன்னாள் மட்டக்களப்பு மாவட்டச் செயலர் மா.உதயகுமார், பொறியியலாளர் மு.ஞானப்பிரகாசம், இராசமாணிக்கம் மக்கள் அமைப்பின் தவிசாளர் இரா.சாணக்கியன், சட்டத்தரணி ந.கமல்தாஸ் என வேட்பாளர்கள் கலந்து கொண்டனர். (ப-150)



## குடமுருட்டிப் பாலத்தால் அச்சமின்றி பயணிக்கலாம்

கிளிநொச்சி, ஜூன் 7

குடமுருட்டிப் பாலத்தின் ஊடாக மக்கள் அச்சமின்றி பயணிக்கமுடியும் என்று கிளிநொச்சி மாவட்ட வீதி அபிவிருத்தி தொழில்நுட்பப் பிரிவினர் தெரிவித்தனர்.

குடமுருட்டிப் பாலத்தின் இரும்புகள் கடந்த மாதம் திருடப்பட்டதாக தெரியவந்ததையடுத்து அதனூடான போக்குவரத்து மிகவும் பாதிக்கப்பட்டது. எனினும் கொழும்பிலிருந்து வரவழைக்கப்பட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர்களால் பாலம் சீரமைக்கப்பட்டது. இதனால் இனி இந்தப் பாலத்தினூடாக கனரகவாகனங்கள் பயணிக்கமுடியும் எனவும் மக்கள் போக்குவரத்தை அச்சமின்றி மேற்கொள்ளலாம் என்றும் கிளிநொச்சி மாவட்ட வீதி அபிவிருத்தி தொழில்நுட்ப உத்தியோகத்தர் மோறாயிஸ் தெறிவித்துள்ளார். (ப-113)



# வெட்டுக்கிளித் தாக்கம் தொடர்ந்தால் பேராபத்து

### கரு ஜயசூரிய சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 7

தற்போது புதிய சவாலாக மாறியிருக்கும் வெட்டிக்கிளிகளின் தாக்கம் தொடருமாக இருந்தால் ஏற்கனவே சுகாதார மற்றும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் விவசாயிகளின் வருமான மார்க்கம் பெரிதும் பாதிக்கப்படும்.

இவ்வாறு முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது டுவீட்டர் பக்கத்தில் பதிவிட்



டுள்ள பதிவில் தெரிவித்துள்ளதாவது:

வெட்டுக்கிளிப் பரவலைக் கட்டுப்படுத்த விரைவான நட வடிக்கை அவசியமாகும். கொரோனாத் தொற்றைத் தொடர்ந்து வெட்டுக்கிளிகளின் படையெடுப்பு விவசாயத் துறைக்குப் பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது. இந்தச் சவாலை எதிர்கொள்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இது விவசாயிகளின் வருமானத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

இந்த நிலைமை தொடருமானால் விவசாயிகளின் வருமான மார்க்கம் பெரிதும் பாதிக்கப்படும். அத்தகைய சூழ்நிலை உருவாகாமல் தடுத்து வைப்பதற்குரிய நட வடிக்கைகள் விரைந்து எடுக்கப்படும்- என்றார். (எ)

## மேலும் 4 மாவட்டங்களில் வெட்டுக்கிளிகள் பரவல்

கொழும்பு, ஜூன் 7



கடந்த சில தினங்களுக்கு முன்னர் குருநாகல் மாவத்தமை பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்ட வெட்டுக்கிளிகள் மேலும் 4 மாவட்டங்களுக்கு பரவியுள்ளன என விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளது. குருநாகல், கேகாலை, மாத்தறை, ஹம்பாந்தொட்டை மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலே இவ்வாறு பரவியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

எனினும், பாலைவன வெட்டுக்கிளி தாக்கம் தொடர்பாக வடக்கு மாகாண விவசாயிகள் அச்சமடையத் தேவையில்லை என வடக்கு மாகாண விவசாய திணைக்களத்தின் பணிப்பாளர் எஸ்.சிவகுமார் தெரிவித்துள்ளார். (ஐ)

## கச்சான் அறுவடைவிழா

மட்டக்களப்பு, ஜூன் 7

ஜனாதிபதியின் நஞ்சற்ற உணவு உற்பத்தி வேலைத்திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்ட விவசாயத் திணைக்களத்தால் ஆரம்பிக்கப்பட்ட நிலக்கடலைச் செய்கையின் அறுவடை மாவட்டம் முழுவதும் நடைபெற்று வருகின்றது.

மட்டக்களப்பு மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வாழைச்சேனை கமநல சேவை பிரிவில் நிலக்கடலை அறுவடை விழா கிரான் சேம்பையடி விவசாயக் கண்டத்தில் கி.பிரபாகரன் என்பவரின் தோட்டத்தில் நேற்று சனிக்கிழமை மாலை இடம்பெற்றது.

விவசாயப் போதனாசியர் எம்.ஜமால்டீன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட விவசாய திணைக்களப் பிரதி விவசாயப் பணிப்பாளர் வி.பேரின்பராஜா, விவசாயத் திணைக்கள உதவி விவசாயப் பணிப்பாளர் ஈ.சுகந்ததாசன், உறுகாமம் பிரிவு பிரதேச நீர்ப்பாசனப் பொறியியலாளர் எஸ்.நிரோஜன், வாழைச்சேனை விவசாய போதனாசிரியர்களான எஸ்.சிரிகண்ணன், எச்.எம்.றியாழ்.தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஏ.எம்.றிபாய்ஸ், வாகனேரி திட்ட முகாமையாளர் எம்.தீபகாந், கிராம அலுவலர் சண்முகம் குரு, வாகனேரி திட்ட முகாமைத்துவக் குழுத் தலைவர் எஸ்.புஸ்பாகரன், விவசாய அமைப்பினர், கிராம மட்டப் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ப-150)



## கொரோனா இயல்பு நிலை;

# நிந்தவூர் கடற்கரைக்கு மக்கள் படையெடுப்பு

அம்பாறை,ஜூன் 7

நாட்டின் முடக்க நிலை தளர்த்தப்பட்டுள்ளதையடுத்து அம்பாறை மாவட்டத்திலும் மக்கள் இயல்புநிலைக்குத் திரும்பி வருகின்றனர்.

அண்மைக்காலமாக நிந்தவூர்ப் பிரதேச கடற்கரைப்பகுதிக்கு பொழுது போக்கிற்காக குடும்பம், குடும்பமாக வருகை தந்த உள்ளூர் மற்றும் அயல்பிரதேச பகுதிகளைச் சேர்ந்த மக்களின் வருகை கொரோனா வைரஸ் பரவல் அச்சம் காரணமாகத் தடைப்பட்டிருந்தது.

எனினும் தற்சமயம் ஊரடங்கு தளர்த்தப்பட்டு நாட்டின் முடக்கம் சுமுக நிலமைக்குவந்து மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பி வரும் நிலையில் நிந்தவூர் கடற்கரைப் பிரதேசத்திற்கு பொழுது போக்கிற்காக வருகை தரும் பொதுமக்களின் தொகையும் அதிகரித்து வருகின்றது.

குறிப்பாக வெள்ளி,சனி, ஞாயிறு தினங்களில் பிற்பகல் வேளைகளில் நிந்தவூர் கடற்கரைப்பிரதேசத்தை பொழுதுபோக்கிற்காக அயல்பிரதேசங்களைச் சேர்ந்த பொதுமக்களும் பெருமளவில் நாடிவருவதும் குறிப்பிடத்தக்கது. மேற்படி தினங்கள் உட்பட ஏனைய தினங்களில் உள்ளூர்வாசிகளும் பெருமளவில் வருகை தருவதும் வழக்கமாகி வருகின்றது.

நிந்தவூர் கடற்கரைப் பிரதேசத்துக்கு பொழுதுபோக்கிற்காக வருகைதரும் பொதுமக்களின் நலன்கருதி தமது எண்ணக்கருவிற்கமைய நிந்தவூர் பிரதேச சபைத் தவிசாளரும், தற்போதய திகாமடுள்ள தேர்தல் மாவட்ட அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் வேட்பாளருமான எம்.ஏ.எம். அஷ்ரப் தாஹிர் முன்னெடுத்த திட்டத்திற்க மைய கடற்கரைப் பிரதேசத்தில் ஆசன வசதிகள் செய்யப்பட்டுள்ளன. (ப-30)

# குற்றவாளிகளைத் தண்டிக்கும் எண்ணம் அரசுக்கு இல்லை!

## சாடுகின்றார் நளின் பண்டார

கொழும்பு, ஜூன் 7

சஹ்ரானின் தற்கொலைத் தாக்குதலுக்கு பொறுப்புக்கூற வேண்டிய பிரதான நபரும், மத்திய வங்கி பிணைமுறி ஊழலுக்கு பொறுப்புக்கூற வேண்டிய முக்கிய நபர்களும் தற்போது அரசுடன் உள்ளனர். குற்றவாளிகளைத் தண்டிக்கும் உண்மையான நோக்கம் அரசுக்கு இருக்குமாயின் அவர்களைத் தண்டிக்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் நளின் பண்டார.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது:

குற்றவாளிகளைத் தண்டிக்க ஜனாதிபதி பல வேலைத்திட்டங்களை உருவாக்கி வருகின்றார். செயலணிகள் உருவாக்கப்படுகின்றன. பாதுகாப்பு அதிகாரிகளுக்கு முக்கிய பொறுப்புக்கள் வழங்கப்படுகின்றன. ஆனால் கடந்த ஆண்டு ஈஸ்டர் தாக்குதலை நடத்திய குற்ற



வாளிகளை இயக்கிய நபர்கள் மற்றும் அதற்கு பொறுப்புக் கூறவேண்டிய நபர்கள் இன்னமும் தண்டிக்கப்படவில்லை.

ஈஸ்டர் தினத்தில் சஹ்ரானின் மூலமாக நடத்தப்பட்ட தற்கொலை தாக்குதலுக்கு பொறுப்புக்கூற வேண்டிய பிரதான நபர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவேயாகும். பாதுகாப்பு அமைச்சு அவரின் கீழ் செயற்பட்டது. இவ்வாறான தாக்குதல்கள் இடம்பெறவுள்ளதாக பல எச்சரிக்கைகள் பாதுகாப்புத் தரப்பினருக்கு வழங்கப்பட்டும் அவை கவனத்தில் கொள்ளப்படவில்லை. முதல் பொறுப்பாளி முப்படைகளின் பிரதானியும், பாதுகாப்பு அமைச்சருமான அவரேயாகும்.

அதுமட்டுமல்ல மத்திய வங்கி பிணைமுறி ஊழலில் பொறுப்புக் கூறவேண்டிய நபர்களும் இன்று ராஜபக்ஷக்களுடன் "டீல்" அரசியலில் ஈடு பட்டு அவர்களையும் தண்டிக்க வேண்டும். வெறுமனே அர்ஜுன் மகேந்திரனைத் தேடிக் கொண்டு ஏனையவர்களை விட்டுவிட அரசு முயற்சிக்கின்றது.

ஆனால் அப்போதும் அதிகாரத்தில் இருந்தவர்கள் பொறுப்புக் கூறியாக வேண்டும். குற்றவாளிகள் அனைவரும் இன்று அரசாங்கத்துடன் ஏதோ ஒருவிதத்தில் ஒட்டிக்கொண்டு உள்ளனர்.

அவர்களைக் காப்பாற்றவே அரசு முயற்சிக்கின்றது. இதுதான் ராஜபக்ஷக்களின் ஆட்சி முறைமை என்பதை மீண்டும் நிரூபித்து விட்டனர்- என்றார். (எ)

# பூசாவில் சிறப்பு அதிரடிப்படையின் பாதுகாப்பை அதிகரிக்க தீர்மானம்

கொழும்பு, ஜூன் 7

பூசா சிறைச்சாலையில் சிறப்பு அதிரடிப்படையினரின் பாதுகாப்பை மேலும் அதிகரிக்க தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை நிர்வாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாதுகாப்பு செயலாளர், பதில் பொலிஸ்மா அதிபர், சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் ஆகியோர் நேற்று சனிக்கிழமை சிறைச்சாலைக்கு பயணம் செய்தமையைத் தொடர்ந்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. ஏனைய சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள போதைப்பொருள் குற்றங்களில் தண்டனை பெற்றவர்கள் உட்பட கடுமையான குற்றவாளிகளை பூசா சிறைக்கு மாற்றுவது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. இந்த நிலையிலேயே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம)

# கொழும்பு, கம்பஹா மாவட்டங்களில் பேருந்துகள் நுழைவதற்கு அனுமதி!

கொழும்பு, ஜூன் 7



கொழும்பு, கம்பஹா மாவட்டங்களுக்குள் பேருந்துகள் நுழைவதற்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் நாளை திங்கட்கிழமை முதல் தளர்த்தப்படுகின்றன.

இதன்மூலம் நாட்டின் அனைத்துப் பாகங்களில் இருந்தும் கொழும்பு, கம்பஹா மாவட்டங்களுக்குள் பேருந்துகள் பிரவேசிக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை நாளை முதல் மேல் மாகாணத்தில் போக்குவரத்து ஒழுங்குவிதிகள் மீள நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

இதன்படி, பேருந்து முன்னுரிமை ஒழுங்கு விதி மொறட்டுவை முதல் புறக்கோட்டை ஒல்கொட் மாவத்தை வரை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இது குறித்து கண்காணிப்பதற்காக நாளாந்தம் போக்குவரத்து கடமைகளில் ஈடுபடுத்தப்படும் பொலிஸ் அதிகாரிகளுக்கு மேலதிகமாக 500 பேர் கடமைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். (ம)



# மழை அதிகரிக்கும்

கொழும்பு, ஜூன் 7

நாட்டின் தென்மேற்கு பகுதியில் அடுத்த சில நாள்களில் மழையுடனான வானிலை சற்று அதிகரிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் இன்று ஞாயிற்றுக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மேல், வடமேல், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் பல இடங்களில் மழையோ அல்லது இடியுடன்கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. மேல், வடமேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் சில இடங்களில் 50 மில்லிமீற்றருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. ஊவா மாகாணத்திலும் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும் சில இடங்களில் பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40-50 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்- என்றுள்ளது. (ம)



# துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு,ஜூன் 7

மினுவாங்கொடை பகுதியில் இன்று பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் நபரொருவர் உயிரிழந்துள்ளார்.

மினுவாங்கொடை பகுதியில் பல குற்றச்சாட்டுகளில் தேடப்பட்டு வந்த அங்குலான 'கொனாகோவில் ராஜா' என்ற சந்தேகநபரே இவ்வாறு துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்துள்ளார்.

மினுவாங்கொடை பகுதியில் பொலிஸாருக்கும் இறந்த நபருக்கும் இடையில் இடம்பெற்ற பரஸ்பர துப்பாக்கிப் பிரயோகத்தின் போதே அவர் இவ்வாறு உயிரிழந்தார். (ஐ)

# கொரோனா விழிப்புணர்வை ஏற்படுத்தி வை.எம்.சி.ஏ. ஆண்டுக் கொண்டாட்டம்

மட்டக்களப்பு, ஜூன் 7

வாழைச்சேனை கிறிஸ்தவ வாலிபர் அமைப்பால் 176ஆவது உலக வை.எம்.சி.ஏ தினம் வாழைச்சேனை பிரதேசத்தில் இன்று கொண்டாடப்பட்டது.

வாழைச்சேனை கிறிஸ்தவ வாலிபர் அமைப்பின் தலைவர் ஞா.விஜயதர்ஷன் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

அந்த வகையில் கொரோனா அச்சத்தைக் குறைப்போம், அவதானமாக செயற்படுவோம் எனும் தொனிப்பொருளில் விழிப்புணர்வு துண்டுப்பிரசுரங்கள் பிரதேச மக்களுக்கு வழங்கப்பட்டன. (ம-150)

# ராஜபக்ஷக்களுடைய மடமாக கட்சியை மாற்றினார் ரணில்

## சாடுகின்றார் மத்தும பண்டார

கொழும்பு, ஜூன் 7

ஐக்கிய தேசியக் கட்சியை அநாதை மடமாக்கி ராஜபக்ஷக்களின் உடன்படிக்கைகளுக்கு அமை யச் செயற்படும் கட்சியாக ரணில் விக்கிரமசிங்க மாற்றிவிட்டார் என்று ஐக்கிய மக்கள் சக்தி யின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ள தாவது:

ஐக்கிய தேசியக் கட்சியைக் கைப்பற்றி இளம் தலைமையின் கீழ் கொண்டு வருவோம். ஐக்கிய தேசியக் கட்சியின் மீதான பற்றும் அக்கறையும் எமக்கு இன்றும் உள்ளது. நாம் அனைவ ரும் ஐக்கிய தேசியக் கட்சியாக அரசியலில் இணைந்து செயற் பட்டவர்கள். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவமே சஜித் பிரேமதாசவை கூட்ட ணியின் தலைவராக்கியது.

அந்தக் கூட்டணியே இன்றும் செயற்பட்டு வருகின்றது. ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி யின் தலைவர் ரணில் விக்கிரம சிங்க ராஜபக்ஷக்களுடன் உடன் படிக்கைகளை முன்னெடுத்து செல்கின்றார் என்ற சந்தேகமே இன்று எம் அனைவருக்கும் தோன்றுகின்றது. ஐக்கிய தேசியக் கட்சியை நாசமாக்கிக் கட்சியை அனாதை மடமாக மாற்ற வேண்டும். ராஜபக்ஷக்களின் கரங்களை பலப்படுத்த வேண் டும் என்ற நோக்கத்தில் அவர் செயற்பட்டு வருகின்றார்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு இன்று இளம் தலைமைத்துவமே தேவைப்படுகின்றது. தலைமைத் துவம் மாற்றப்பட்டு சகலரும் ஒன்றிணைந்து பயணிக்க வேண் டிய கட்டாயம் உள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் பெரும்பான் மையான உறுப்பினர்கள் இன்று ஓர் அணியாக ஒன்றிணைந்து சஜித் பிரேமதாசவின் தலை மைத்துவத்தில் இயங்க தீர்மா னித்துள்ளனர். ஐக்கிய மக்கள் சக்தியாக நாம் அனைவருமே செயற்பட்டு வருகின்ற நிலை யில் ஐக்கிய தேசியக் கட்சியை யும் முழுமையாக எமது கட்சி யாக்க வேண்டும். இளம் தலை மைத்துவத்தின் கீழ் கட்சியை வழிநடத்த வேண்டும். பொதுத் தேர்தலின் பின்னர் இந்த மாற் றங்கள் நிச்சயமாக இடம்பெ றும். ஐக்கிய தேசியக் கட்சியும் எமது கட்சியாகும் . சஜித் பிரேமதாசவின் கீழ் கட்சியை வழிநடத்துவோம். வெகு விரை வில் ஐக்கிய தேசிய கட்சியை நாமே கைப்பற்றுவோம்.

தூய்மையான தலைமைத்துவ மும் மக்கள் நலன்களைக் கருத்தில் கொண்டு செயற்படும் உறுப்பி னர்களும் எம் தரப்பில் உள்ள னர். நாம் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியாக அமருவோம். அதேபோல் விரைவில் ஐக்கிய தேசியக் கட்சியையும் எமது கட்சியாக்குவோம்- என்றார்.(எ)



## இலங்கையர் இருவருக்கு சிங்கப்பூரில் சிறை

கொழும்பு, ஜூன் 7

போலி ஆவணங்களை வைத்திருந் தமை தொடர்பில் இலங்கையர்கள் இருவருக்கு சிங்கப்பூரில் சிறைத்தண் டனை விதிக்கப்பட்டுள்ளதாக வெளி நாட்டு ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

இலங்கையர்களான புஸ்பராஜ் கபில் (21) மற்றும் ராமசந்திரன் கிஷோா பிரசாத் (32) ஆகிய இருவருக்கே தலா 8 மாதங் கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள் ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போலி சிங்கப்பூர் கடவுச்சீட்டு மற்றும் போலியான சிங்கப்பூர் அடையாள அட்டை என்பவற்றை வைத்திருந்த குற்றச்சாட்டில், சிங்கப்பூர், டுவாஸ் சோதனைச்சாவடியில் வைத்து கடந்த பெப்ரவரி மாதம் 29 ஆம் திகதி சந்தேக நபரொவருர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவருக்கு ஆதரவளித்த குற்றச்சாட்டில் மற்றைய சந்தேகநபர் கைதுசெய்யப் பட்டுள்ளார்.

இவர்கள் அகதி அந்தஸ்த்து கோரி கனடா செல்வதற்காக போலி ஆவ ணங்களை தயார் செய்துள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

போலி ஆவணங்களைத் தயாரித்த குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதை யடுத்து, இருவருக்குத் தலா 8 மாத சிறைத்தண்டனை விதித்து அந்நாட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதாக வெளிநாட்டு ஊடகம் மேலும் தெரி வித்துள்ளது. (க)

## தேர்தல் ஆணைக்குழுவுக்கு சேறுபூசும் தேவை அரசுக்கு

### பிமல் ரத்நாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 7

பேராசிரியர் ஹூல் தெரிவித்துள்ள தனிப் பட்ட கருத்துக்களையும் செயற்பாடுகளை யும் எம்மால் ஏற்றுக்கொள்ளமுடியாது என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தற்போதைய நிலைமையில் தேர்தல்கள் ஆணைக்குழு மீது சேறுபூச வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு உள்ளது என்பதை யும் ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும். தேர்தல்கள் ஆணைக்குழு சுயாதீனத்தன்மை யுடன் செயற்படவில்லை என்று கூறவேண் டிய கட்டாயம் அவர்களுக்கு உள்ளது.

இதனால், தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் மஹிந்த தேசப்பிரிய அல்லது பேராசிரியர் ஹூலில் ஏதாவது ஒரு குறையை, உயர்த்திப் பிடிக்கவே ஆளும் தரப்பு முயற்சிசெய்து வருகிறது.

இந்தச் செயற்பாட்டை நாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவே முடியாது. தேர்தல்கள் ஆணைக்குழு சுயாதீனத்தன்மையுடன் செயற்படுமானால், அது ஜனநாயகத்தை பாதுகாக்கும் வழிவகை என்பதே எமது நோக்கமாகும்- என்றார். (எ)

## வீட்டுத்தோட்டம் அமைக்க 12,117 பேர் விண்ணப்பம்!

யாழ்ப்பாணம், ஜூன் 7

'சௌபாக்கியா' வீட்டுத் தோட்டம் அமைப்பதற்கு 12,117 பேர் விண் ணப்பித்துள்ளனர் என்று வடக்கு மாகாண விவசாய திணைக்கள பணிப்பாளர் எஸ்.சிவகுமார் தெரிவித்தார்.

தற்போது அரசால் முன்னெடுக்கப் பட்டுவரும் 'சௌபாக்கியா' வீட்டுத் தோட்ட உணவு உற்பத்தி வேலைத் திட்டம் யாழ்ப்பாண மாவட்டத் தில் முன்னெடுக்கப்படுதல் தொடர் பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரி விக்கும்போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சௌபாக்கியா வேலைத் திட்டமா னது இரண்டு பிரிவுகளாக முன்னெ டுக்கப்பட்டு வருகின்றது. ஒன்று கமநலசேவைகள் திணைக்களத்தி னூடாக விதைகள் விநியோகிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதேபோன்று மாகாண



விவசாய திணைக்களத்தினூடா கவும் விதைகள் மக்களுக்கு விநி யோகிக்க நடவடிக்கை முன்னெ டுக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்டத்திற்கென 10 ஆயிரம் விதைப் பைக்கற்கள் அதே போல் ஏனைய மூன்று மாவட்டங் களுக்கும் 5 ஆயிரம் விதை பைக்கற் கள் என்ற அடிப்படையில் விதை கள் வழங்கப்பட்டுள்ளன. கொரோனா இடரைக் கருத்தில்கொண்டு உணவுப் பஞ்சத்தைத் தவிர்க்கும் விதமாக பலர் இந்த விதைகளைப் பெற்று வீட்டுத்தோட்டம் அமைக்க ஆர்வம்காட்டி வருகின்றனர்- என் றார். (ம)

## சுற்றிவளைப்பு; 437 பேர் கைது

கொழும்பு, ஜூன் 7

கொழும்பில் பல பகுதிக ளில் கடந்த 24 மணி நேரத் தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது 437 பேர் கைதுசெய்யப் பட்டனர் என்று பொலி ஸார் தெரிவித்தனர்.

ஹெரோய்ன், கஞ்சா உள்ளிட்ட போதைப்பொ ருள்கள் வைத்திருந்த குற்றச் சாட்டிலேயே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர். மேல் மாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் தேச பந்து தென்னகோனின் வழி காட்டலின் கீழ் இடம் பெற்றுள்ள இந்த சோதனை நடவடிக்கைகளின் போது 408 இடங்கள் சோதனைக் குட்படுத்தப்பட்டன.

இதன்போது ஹெரோய்னு டன் 140 பேரும், கஞ்சாவு டன் 63 பேரும், போதைப் பொருளுடன் 15 பேரும் கைதுசெய்யப்பட்டனர். சந்தேகநபர்கள் மீது சட்ட நடவடிக்கைகள் எடுக்க வுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## இங்கிலாந்தில் சிக்கிய 278 பேர் நாடு திரும்பினர்

கொழும்பு, ஜூன் 7

கொரோனா வைரஸ் தொற்றால் இங்கிலாந்தில் சிக்கித் தவித்த 278 இலங்கையர்கள் விசேட விமானம் மூலம் இன்று நாட்டுக்கு அழைத்து வரப்பட்டனர்.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸிற்கு சொந்தமான, விசேட விமானம் மூலம் இவர்கள் இங்கிலாந்திலிருந்து அழைத்து வரப்பட்டனர். (ஐ)



# சிவில் சட்டங்களை மதிக்காது இயங்கும் கோத்தா, மஹிந்த!

## துஷார இந்துனில் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 7

ஜனாதிபதி கோத்தாபய ராஜ பக்ஷவும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் நாட்டின் சிவில் சட்டங்களை மீறிச் செயற்படு கின்றனர் என்று ஐக்கிய தேசி யக் கட்சியின் முன்னாள் நாடா ளுமன்ற உறுப்பினர் துஷார இந்துனில் குற்றஞ்சாட்டியுள் ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

துறைசார் தேர்ச்சி பெற்றவர் கள் ஊடாக முன்னெடுக்க வேண்டிய பிரிவுகளுக்கு இரா ணுவத்தினரை நியமித்து வரு வது இராணுவ ஆட்சிக்கு வித்திடுவதாகும்.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக நடைமுறைப்ப டுத்தப்பட்டிருக்கும் தனி மைப்படுத்தல் மற்றும் தொற்று நீக்க சட்டவிதிகளை அரசு மீறி வருகின்றது. அமெரிக்க இராஜதந்திரி தொடர்பிலும் அக்கறையின்றி இருக்கின்றது.

இந்த விடயம் தொடர்பில் வெளிநாட்டு அமைச்சர் மற்றும் அமைச்சின் செயலா ளர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். ஜனாதிபதி கோத்தா பய ராஜபக்ஷ இராணுவ ஆட்சிக்கு வித்திட்டு வருகின் றார். நிர்வாகத்துறை , வெளி நாட்டு விவகாரம் , பொருளா தார முகாமைத்துவம் போன்ற துறைகளுக்கு பரீட்சைகள் இடம்பெற்று வருகின்ற நிலையில், அந்த துறைகளில் தேர்ச்சி பெற்றவர்களை விடுத்து இரா ணுவத்தினரை அவற்றில் அமர்த்துவது இராணுவ ஆட்சியை முன் னெடுப்பதற்கான நோக்கமா கும்.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக நடைமுறைப்ப டுத்தப்பட்டுள்ள தனிமைப்ப டுத்தல் மற்றும் தொற்று நீக்க சட்ட விதிமுறைகளை மீறி அரசு செயற்பட்டு வருவதை அண்மையில் அவதானிக்க முடிகின்றது. அவர்களது செயற்பாடுகளின் காரணமாக இவ்வளவு நாளும் கொரோனா வைரஸ் தொடர்பில் ஊடக முன்னிலையில் பல்வேறு ஆலோ சனைகளை வழங்கிய கொரோனா வைரஸ் பர வலைக் கட்டுப்படுத்துவதற் காக ஜனா திபதியால் நிய மிக்கப்பட்ட செயலணியின ரும் அமைதிகாத்து வருகின்ற னர்.அமெரிக்க இராஜதந்திரி ஒருவர் சுகாதார பாதுகாப்பு நட வடிக்கைகளை கருத்தில் கொள்ளாது அவர் இஷ்டம் போல நாட்டுக்குள் வந்துள் ளார். கடந்த காலங்களில் நல்லாட்சி அரசாங்கம் அமெ ரிக்காவுக்கு துணைபோவ தாகத் தெரிவித்து வந்த அமைச் சர்களான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில ஆகியோர் தற்போது எங்கே?. இந்த அமெ ரிக்க இராஜதந்திரி தொடர் பான விவரங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கலாம் தானே?. தற்போது ஏன் அமைதியாக இருக்கின்றார் கள்?- என்றார். (எ)



# ஸ்ரீலங்கன் விமான உதவி ஊழியர்கள் 1000 பேர் நீக்கம்

கொழும்பு, ஜூன் 7

ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம், உதவி ஊழியர்களாக பணிப்புரிந்த சுமார் ஆயிரம் பேரை தற்காலிக பணிநீக்கம் செய்துள்ளது.

இந்த தீர்மானம் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் வரை அமுலில் இருக்கும் என்று ஸ்ரீலங்கா சுதந்திர ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்தில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்த 400 பேர் மற்றும் நிறுவனத்துடன் சம்பந்தப்பட்ட வேறு நிறுவனங்களில் தொழில் புரிந்த 600 பேர் இவ்வாறு தற்காலிகமாக பணிநீக்கம் செய்யப்ப ட்டுள்ளனர். (க)

# பாதுகாக்கப்பட்ட நிலத்தையும் தமிழர் கொண்டிருக்கவேண்டும்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவிப்பு

வவுனியா, ஜூன் 7

தமிழினமே, உங்கள் சிந்தனையை நீட்டுங்கள், தமி ழர்கள் வடக்கு, கிழக்கில் காக்கப்படவேண்டும் என்பது மட்டுமல்ல, பாதுகாப்பான மற்றும் பாதுகாக்கப்பட்ட நிலத்தையும் கொண்டிருக்க வேண்டும் என்று, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.

காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனைத் தேடிப் போராட்டங்களில் கலந்துகொண்டு அண்மையில் உயிரிழந்த தந்தை ஒருவருக்கு அஞ்சலி செலுத்திவிட்டு இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போதே காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் இவ்வாறு தெரி வித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

இன்று எங்கள் தலைவர் ஐயா நல்லதம்பிக்கு கடைசி வணக்கம் செலுத்த நாங்கள் இங்கு சேர்ந்துள்ளோம். அவரது இறப்பால் நாங்கள் மிக வருத்தப்படுகிறோம். அவர் எங்களை விட்டு மிக விரைவில் விலகி விட் டார். அவர் எங்கள் போராட்டத்தின் வலுவான ஆதரவாளர். அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றி யத்தின் உதவியுடன் தனது மகனைக் கண்டுபிடிப்ப தில் அவர் மிகவும் உறுதியாக இருந்தார். 2008 இல், அவரது மகன் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டு , நீதிமன்றத்திலிருந்து வெளியே வந்தவுடன் வெள்ளை வான் கடத்தல்காரர்களால் கடத்திச் செல்லப்பட் டார். அவரின் மகனுக்கு என்ன நடந்தது என்பது எங்களுக்கும் ஐயாவுக்கும் தெரியாது. அவர் நீதித்துறை மற்றும் கடத்தல்காரர்கள் இரண்டையும் குற்றம்சாட்டினார். அனைவரும் ஒன்றாக வேலை செய்து தனது மகனைக் கடத்தினார்கள் என்றார்.

நாம் அனைவரும் அறிந்தபடி, கடந்த ஏழு தசாப்தங்க ளாக, தமிழர்கள் சிங்களவர்களால் தாக்கப்பட்ட போது, ஒரு சிங்களவர்கூட தமிழர்களின் கொலையை நிறுத்தும்படி ஆர்ப்பாட்டம் செய்ததை நாங்கள் காணவில்லை. 2009 ஆம் ஆண்டில், முள்ளிவாய்க் காலில் ஒரு லட்சத்து 45ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டனர், தமிழர்களின் வெகு ஜன கொலைகளைத் தடுக்க எந்தச் சிங்களவர்களும் ஆர்ப்பாட்டம் செய்யவில்லை. தமிழினமே, உங்கள் சிந்தனையை நீட்டுங்கள், தமிழர்கள் வடகிழக்கில் காக்கப்படவேண்டும் என்பது மட்டுமல்ல, பாதுகாப் பான மற்றும் பாதுகாக்கப்பட்ட நிலத்தையும் கொண் டிருக்க வேண்டும் என்பதை பற்றிச் மூளைச்சலவை செய்யுங்கள். பாதுகாப்பான மற்றும் பாதுகாக்கப் பட்ட தாயகத்தை உருவாக்குவதால் , நாங்கள் எங்கள் நிலத்தைப் மீளப் பெற முடியும் மற்றும் சிங்கள ஆக்கிரமிப்பிலிருந்து எம்மால் சுதந்திரம் பெற முடி யும் - என்றனர். (ப-110)

# இலங்கை வான்பரப்பில் மர்மமான உயிரினம்

கொழும்பு,ஜூன் 7

இலங்கையின் வான்பரப் பில் மர்மமான உயிரினம் ஒன்று சுற்றித் திரிவதாக கொழும்பு பல்கலைக்கழ கம் தெரிவித்துள்ளது.

தெளிவாக அடையாளம் காணப்படாத உயிரினம் ஒன்றே இவ்வாறு சுற்றித் திரிவதாக கொழும்பு பல்கலைக்கழகத்தின் வானி யல் பேராசிரியர் சந்தன ஜயரத்ன தெரிவித் துள்ளார்.

இது குறித்த காணொலி ஒன்றும் கிடைத்துள்ளது. எவ்வாறாயினும் இது எந்த வகை உயிரினம் என்பது குறித்து இதுவரை அடை யாளம் காணப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட் டுள்ளார்.

ஹம்பாந்தோட்டை, திருகோணமலை, நுவரெ லியா உட்பட பல பிரதே சங்களில் குறித்த உயிரி னம் அடையாளம் காணப் பட்டுள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (க)

# சுகாதார நடைமுறைகளுடன் வழிபாட்டுக்கு அனுமதிக்கவும்

## கொழும்பு பேராயர் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 7



இறை வழிபாடுகளில் ஈடு பட அனுமதி வழங்கு மாறு பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண் டகை அரசிடம் கோரிக்கை விடுத்துள் ளார். கொரோனா கார ணமாக முடக்கப்பட்டி ருந்த இலங்கை தற்போது வழமைக்கு திரும்பி வரும் நிலையில் அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத் துள்ளார்.

தனிமைப்படுத்தப்பட்ட சட்டங்கள் மற்றும் சுகாதார நடைமுறைகளின் படி ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையி லான மக்கள் வழிபாட்டு நட வடிக்கையில் ஈடுபட அனும திக்க வேண்டும்.

நாளாந்த ஆராதனைகளை நடத்தவும் அனுமதி வழங்க வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்று நாட்டில் அடையாளம் காணப்பட்ட நாள்முதல் வீட்டிலிருந்தே பிரார்த்தனை களை மேற்கொள்ளுமாறு கிறிஸ்தவ மக்கள் வேண்டப் பட்டிருந்ததற்கு அமைய மக் கள் செயற்பட்டனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே, தற்போதைய நிலைக்கு அமைய வரையறுக் கப்பட்ட மக்கள் தொகையு டன் தினமும் கிறிஸ்தவ தேவா லயங்களில் பிரார்த்தனை களை நடத்த அனுமதி வழங்குமாறு பேராயர் ஜனா திபதி மற்றும் அரசிடம் இந்த கோரிக்கையை முன்வைத் துள்ளார்.

உலகை அச்சுறுத்தும் கொரோனா வைரஸ் இலங் கையிலும் பரவியதையடுத்து, நாட்டில் ஊரடங்கு அமுல்ப டுத்தப்பட்டதைத் தொடர்ந்து, இறைவழிபாடுத் தலங்க ளில் மக்கள் ஒன்றுகூடுவதற்கு தடை விதிக்கப்பட்டிருந் தமை குறிப்பிடத்தக்கது. (க)

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 07.06.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.